(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES UNDER PREVENTION OF CORRUPTION ACT, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case Number | : | Spl.C.C.No.1/2015 |
| Deposition Of Witness for | : | PW8 |
| Name | : | **Thiru.Balakrishnan** |
| Father's Name | : | Kalimuthu |
| Village | : | Avudaiyarkovil |
| Taluk | : | Avudaiyarkovil(Tk.) |
| Calling | : | Senior Revenue Inspector |
| Age | : | 37 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **8th May 2025.**

(1வது எதிரி முன்னிலை, 2வது எதிரி முன்னிலையில்லை, அவர் நீதிமன்றத்தில் முன்னிலையாவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.... It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.**)

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை** :

1. நான் தற்போது புதுக்கோட்டை ஆவுடையார்கோவில் தாலுகா அலுவலகத்தில் முதுநிலை வருவாய் ஆய்வாளரா பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2011-ம் ஆண்டு முதல் புதுக்கோட்டை மாவட்டம்

ஆவுடையார்கோவில் தாலுகா கரூர் குரூப் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன். ஏம்பல் குரூப்பிற்கு கூடுதலாக பொறுப்பு வகித்தேன். ஆவுடையார்கோவில் கிராமத்தில் வட்டாட்சியர் மற்றும் துணைவட்டாட்சியர் அவர்களின் அறிவுரைப்படி ஆவுடையார்கோவில் தாலுகா, இச்சிக்கோட்டை கிராமத்தில் திரு.சண்முகசுந்தரம் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் மனைவி திருமதி.பாக்கியலட்சுமி, மகன்கள் திரு.பகீரதன் மற்றும் திரு.பார்த்திபன் ஆகியோர்களது பெயர்களில் நஞ்சை புஞ்சை நிலங்கள் மற்றும் வீடுகளை என்னை ஆய்வு செய்ய சொன்னார்கள்.

2. அந்த கிராமத்திற்கு பராமரிக்கக்கூடிய நிலங்களின் சிட்டா மற்றும் அடங்கல் ஆகிய வருவாய் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் திரு.சண்முகசுந்தரம் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் மனைவி திருமதி.பாக்கியலட்சுமி, மகன் திரு.பகீரதன் பெயரில் சொத்துக்கள் இருந்தது குறித்து விபரம் சொன்னேன். என்னிடம் காண்பிக்கப்படும் அ.த.சா.ஆ–14 கோப்பில் உள்ள விபரங்களை ஆய்வாளரிடம் கூறினேன். அ.த.சா.ஆ–14 கோப்பில் உள்ள ஆவணங்களை காண்பித்து காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. நான் மேற்படி நிலங்கள் குறித்து வட்டாட்சியருக்கு அறிக்கை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், அடங்கல் மற்றும் சிட்டா கொடுத்தேன். ஏம்பல் குரூப்பில் நான் எவ்வளவு நாட்கள் பணிபுரிந்தேன் என்றால் நான் கூடுதல் பொறுப்பு வகித்தேன். எந்த ஆண்டு நான் கூடுதல் பொறுப்பு வகித்தேன் என்றால் 2012-ம் ஆண்டு கூடுதல் பொறுப்பு வகித்தேன்.

2. மேற்படி நிலங்கள் தொடர்பாக தகவல் கேட்டு வட்டாட்சியரிடமிருந்து எனக்கு ஏதேனும் கடிதம் வந்ததா என்றால் இல்லை. திரு.சண்முகசுந்தரம் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் மனைவி திருமதி.பாக்கியலட்சுமி, மகன் திரு.பகீரதன் ஆகியோரது பெயரில் உள்ள நிலங்களில் ஆழ்துளை கிணறுகள், மின் இணைப்பு மற்றும் சோலார் இணைப்புடன் கூடிய மோட்டார்கள் இருந்ததா என்றால் வட்டாட்சியர் என்னிடம் சொத்து தொடர்பான ஆவணங்கள் மட்டும் கோரியிருந்ததால் அந்த ஆவணங்களை மட்டும் வட்டாட்சியர் அலுவலகத்தில் சமர்ப்பித்தேன்.

3. மேற்படி நிலங்களில் என்னென்ன விவசாயம் செய்தார்கள்

என்று எனக்கு தெரியாது என்றால் மேற்படி சொத்துக்கள் தொடர்பாக நான் பணிபுரிந்த காலத்தில் உள்ள பசலிக்கான விபரங்கள் கோரப்படவில்லை முந்தைய பசலிகளுக்கு சொத்து விபரம் கோரப்பட்டது. அதனால் எனக்கு அது பற்றி தெரியாது என்றால் சரிதான். இச்சிக்கோட்டை கிராமத்தில் நஞ்சை நிலங்களில் மூன்று போகம் சாகுபடி செய்கிறார்கள் என்றால் இல்லை, ஒரு போகம்தான் சாகுபடி செய்யப்பட்டது. அதுபோக புஞ்சை நிலங்களில் தேக்குமரங்கள், தென்னை மரங்கள் ஆகியவை இருந்தது என்றால் இடத்தை பார்வையிட்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு என்னிடம் கோரப்படவில்லை, அதனால் மேற்படி மரங்கள் குறித்து எனக்கு தெரியாது.

4. மேற்படி நிலத்தில் ஊடுபயிராக தட்டைப்பயறு, பாசிப்பயறு, மரவள்ளிக்கிழங்கு ஆகியவை பயிர் செய்யப்படும் என்றால் இச்சிக்கோட்டை கிராமத்தில் அவ்வாறு ஊடுபயிர்கள் பயிர் செய்யப்படுவதில்லை. ஒருபோக சாகுபடியில் ஒரு ஏக்கருக்கு எத்தனை மூட்டைகள் நெல் கிடைக்கும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஒரு வருடத்திற்கு எத்தனை முறை விவசாய நிலங்களை பார்வையிடுவேன் என்றால் பயிர் ஆய்வு செய்யப்படும் காலங்களில் பார்வையிடப்படும். சாகுபடி கணக்கு என்பது ஆண்டுக்கு ஒருமுறை கண்மாய் கரையில் நின்று

கொண்டு எழுதுவதுதான் வழக்கம் என்றால் அது தவறு. பொதுவாக ஒரு நபர் பெயரில் சொத்து மற்றும் பட்டா இருக்கும், ஆனால் அந்த நிலத்தினை வேறு ஒரு நபர் உழுது அனுபவித்து வரும் வழக்கம் உண்டு என்றால் சரிதான். அவ்வாறு அந்த நிலத்தினை உழவடை செய்பவர் பெயர் சாகுபடி கணக்கில் எழுதப்பட மாட்டாது என்றால் சரிதான். அ.த.சா.ஆ.14 கோப்பில் உள்ள ஆவணங்கள் உண்மையான சாகுபடி விபரங்களை தெரிவிக்கும் ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல. என்னை விஜிலன்ஸ் போலிசார் விசாரித்தார்களா என்றால் ஆமாம். எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் ஆவுடையார்கோவில் தாலுகா அலுவலகத்தில் வைத்து விசாரித்தார்கள். யார் விசாரித்தார் என்றால் காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார், தேதி ஞாபகமில்லை.

**<u>மறுவிசாரணை</u>** : இல்லை.

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct"

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2025.05.08 16:31:30 +0530

**Special Judge,**
P.C.ACT Cases,
Sivagangai.